**CC No. 274/2023**

## எதிரி ஆஜர்

அ.சா. **1** சுவிதா மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

2017 காலக்கட்டத்தில் M.Com (CA) , M.Phil. படித்திருந்தேன். எனக்கு 2009 ல் திருமணமானது. எங்களது திருமணம் காதல் திருமணம். கரூர் நீதிமன்றத்தில் நான் கட்டளை பணியாளர் தட்டச்சர் பணிக்கு தனியாகவும், அதற்கு பிறகு இளநிலை நிர்வாக உதவியாளர் பணிக்கு தனியாகவும், பணிவேண்டி பதிவு செய்திருந்தேன். இளநிலை நிர்வாக உதவியாளர் பணிக்கு நான் தேர்வு எழுதினேன். போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் பணிக்கு விண்ணப்பித்தற்கான விண்ணப்ப படிவத்தையும் ஹால் டிக்கெட்டையும் கொடுத்தேனா என்றால் நீதிமன்றத்தில் தேர்வு எழுதும்போது ஹால் டிக்கெட்டை அவர்கள் திரும்ப பெற்று கொண்டார்கள். விண்ணப்பப்படிவம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டோம்.

2. நான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் எதிரியின் வீட்டிற்கு அடுத்ததெருவில் குடியிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றும் என் அப்பா அம்மாவுடன் குடியிருந்தேனா அல்லது திருமணமாகி எனது கணவருடன் குடியிருந்தேனா என்றால் அப்பா அம்மாவுடன் இருந்தேன். எதிரி முத்தையனின் வீட்டிற்கு எதிரில் உள்ள ராஜா என்பவர் 1983 ல் இருந்து என் அப்பாவுடன் பணிபுரிந்துள்ளார். அவர் வீட்டிற்கு போகும்போது எனக்கு எதிரியை தெரியும். மீண்டும சாட்சி எனக்கு திருமணம் ஆனா பின்பு எதிரி குடியிருந்த ராமானுார்க்கு வந்ததாகவும், அதற்கு முன்பு தனது அப்பாஅம்மா ஊரான வாங்கபாளையத்தில் இருந்ததாகவும், தான் திருமணம் ஆகும் முன்பே எதிரியை தெரியும் என்றும் கூறுகிறார். 2017 ம் காலகட்டத்தில் எனது கணவர் அரசு வேலையில் இருந்தார். எனது அப்பாவும் அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்.

s/d K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

3. நான் கொடுத்த புகார் சம்பந்தமாக மாவட்ட நீதிபதியால் விசாரணை செய்யப்பட்டது. அதன் பின்பு எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. எதிரிக்கு எதிரான நிர்வாக விசாரணையில் DP No 3/2020 கரூர் மாவட்ட சட்ட பணி ஆணைக்குழு நீதிபதி முன்பு நடத்தப்பட்ட விசாரணையில் நானும் எனது அப்பாவும் சாட்சியம் அளித்தோம் என்றால் சரிதான். அங்கு என்னை குறுக்கு விசாரணை செய்தார்களா என்றால் சரிதான். அதன் முடிவு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. நான் போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொன்ன சங்கதிகளை தான் நிர்வாக விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நிர்வாக விசாரணையில் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றம் நிருபிக்கப்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. நான் புகாரில் அடையாளம் தெரியாத நபர் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றும் அவர் யார் என்று இது நாள் வரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் நான் பாபுவை பற்றி எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் பின்னர் விசாரிக்க அவர் கரூர் ஜிபி நகரை சேர்ந்த கஸ்தூரி மகன் பாபு என்றும் அவர் கரூர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து மேற்படி வேலையை ராஜினாமா செய்து விட்டு நிறையபேரிடம் பணம் வாங்கி கொண்டு திருப்பி கொடுக்காமல் தலைமறைவாகிவிட்டார் என்றும் தெரிய வந்தது என போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் நான் கூறவில்லை.

5. 2017 ல் எதிரி முத்தையனை கரூர் நீதிமன்றத்தில் அக்டோபர் மாதத்தில் பார்த்தேன் என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். மாதத்தை சொல்லவில்லை. அப்போது முத்தையன் எந்த நீதிமன்றத்தில் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் இந்நீதிமன்றத்தில் வேலை செய்தார் என்று தெரியும் என்ன வேலை பார்ததார் என்று தெரியாது. 18.11.2017 ல் நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்ற நேரம் எத்தனை

s/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

என்றால் காலை மணி 10-10.30 இருக்கும். யாரெல்லாம் அவர் வீட்டிற்கு சென்றோம் என்றால் நான், எனது அப்பா, அப்பாவுடைய நண்பர் ஆகியோர் சென்றோம்.

6.நாங்கள் 3 பேரும் சோபாவில் உட்கார்ந்து இருந்தோம். யார் யார் எங்கெங்கு உட்கார்ந்திருந்தோம் என்றால் எனது அப்பாவும் அவருடைய நண்பரும் ஒன்றாக உட்கார்ந்திருக்கலாம் நான் தனியாக உட்கார்ந்திருக்கலாம். என் அப்பா வைத்திருந்த போன் கேமரா போன் தான் அதன் நம்பர் எனக்கு தெரியும். எனது அப்பா தான் புகைப்படம் எடுத்தார். அந்த புகைப்படம் அந்த போனில் தான் எடுக்கப்பட்டது என்றால் போனில் உள்ள கேலரியில் தான் இருக்கும். புகாரிலோ போலிசார் விசாரணையிலும் எனது அப்பா போனில் புகைப்படம் எடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் முதல் விசாரணையில் சொல்லவில்லை மறுவிசாரணையில் சொல்லியுள்ளேன். நான் போலிசார் மறுவிசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. சா.பொ. 1ன் படி இந்த வழக்கில் எடுககப்பட்டதாக கூறப்படும் ஜோடிக்கப்பட்ட போட்டோ அந்த செல்போன் மூலமாக எடுககப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாபுவை நன்றாக தெரியும் என்றும் அவர் தான் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சொல்லி புகாரில் சொல்லியுள்ளது போல் எதிரி என்னுடன் எந்த தொடர்பிலும் இல்லை என்றும் பாபு முத்தையனிடம் அவர் வாங்கிய கடனை திருப்பி செலுத்தியபோது முத்தையனுக்கு தெரியாமல் எடுத்தபோட்டோவை எனது தந்தை எடுத்தது போல் பொய்சொல்லி எதிரியின் மீது பொய்யான குற்றச்சாட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, அதனால் தான் அந்த புகைப்படத்தில் நானும், அப்பாவும், ராஜாவும் இல்லை என்றால் நாங்கள் முத்தையனுக்கு எதிரில் அமர்ந்திருந்தோம். புகைப்படம் எடுததாக சொல்லப்படும் விதம் தவறு பாவுவிடம் பணம் திரும்பி வாங்கமுடியாது என்று தெரிந்து எதிரியின் மீது பொய்யாக புகார் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

**CC No. 274/2023**

## எதிரி ஆஜர்

அ.சா. 2 சண்முகம் மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எனது சொந்த ஊர் வாங்கல் குப்பிச்சி பாளையம் . எனது மகள் திருமணத்திற்கு பின் ராமானூரில் வசித்து வந்தார். எனது மகளுக்கு யார் வேலை வாங்கி கொடுப்பார்கள் என்றும் யார் பணம் கேட்டார்கள் என்ற விபரமும் நேரடியாக முதலில் தெரியாது பின்னர் தெரிந்து கொண்டேன். காலை 10 மணிக்கு மேலே 12 மணிக்குள் எதிரி முத்தையன் வீட்டிற்கு சென்றதாக ஞாபகம் உள்ளது. அங்கு நான் எனது மகள் , மற்றும் எனது நண்பர் இறந்துபோன ராஜா மூவரும் எதிரியின் முத்தையன் வீட்டிற்கு சென்றோம். அந்த புகைப்படத்தை நான்தான் எடுத்தேன். அந்த போனில் போட்டோ இருக்குமா என்றால் போன் டேமேஜ் ஆகிவிட்டதால் போனில் இருக்குமா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. அந்த போனை தீபம் கலர்லேப்பில் போட்டோ பிரிண்ட் எடுத்தேன். தீபம் கலர் லேபில் வேலைபார்க்கும் கண்மணி என்ற பெண் எனக்கு சொந்தமா என்றால் சொந்தம் இல்லை. நான் நீங்கள் கூறுவது போல் எதிரியை போட்டோ எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாபு என்பவர் என் மகளிடம் கொடுத்த புகைப்படத்தை வைத்து கொண்டு எதிரி மீது தன் மகள் அ.சா. 1 காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாபுவை பற்றி எனக்கு இதுநாள் வரை தெரியாது என்றால் போலிசில் புகார் கொடுப்பதற்கு முன்பாக என் மகள் மூலமாக பாபுவும் முத்தையனும் நீதிமன்றத்தில் வேலை செய்வது தெரிந்து கொண்டேன்.

s/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

3.பாபுவைபற்றி நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் என்னை அது பற்றி விசாரிக்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் பின்னர் விசாரிக்க அவர் கரூர் ஜிபி நகரை சேர்ந்த கஸ்தூரி மகன் பாபு என்றும் அவர் கரூர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து மேற்படி வேலையை ராஜினாமா செய்து விட்டு நிறையபேரிடம் பணம் வாங்கி கொண்டு திருப்பி கொடுக்காமல் தலைமறைவாகிவிட்டார் என்றும் தெரிய வந்தது என போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் நான் கூறவில்லை. பாபுவை பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் பாபு தன் மகளுடன் நடந்த உண்மையான பண பரிவர்தனை தெரிந்துவிடும் என்பதால் பாபுவை தெரியாது எனகூறி எதிரி மீது பொய்யாக குற்றசாட்டு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பாபுவை யார் என்றே எனக்கு தெரியாது முத்தையனை மட்டும் தான் தெரியும்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.